| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **227/2010** |
| **DATE** | : | **14.10.2025** |
| **பெயர்** | : | **முனியன்** |
| **தந்தை பெயர்** | : | **துரைபிள்ளை** |

**வாதி தரப்பில் பி.வா. சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**2.** நான் எத்தனை செண்ட் சொத்து வாங்கினேன் என்ற விவரம் தற்போது ஞாபகமில்லை. 12 பங்குதாரர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அவர்கள் யார் என்று தெரியாது. 12 பங்குதாரர்களுக்கு சொந்தம் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் 3 பங்கிற்கான ஆதாரம் வைத்துள்ளேன். நான் 2001ல் கிரையம் வாங்கினேன். அருள் எவ்வளவு சொத்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி அருளின் பத்திரத்தை நான் பார்க்கவில்லை. எங்கள் ஊரில் சிவகொழுந்து செட்டியார்களுக்கு இடங்கள் இல்லை. சீனுவாச செட்டியார் என்பவர் குத்தகை பயிர் செய்து வந்தார். அவர் யார் நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

3. சொத்தை வாங்கிய காலகட்டத்தில் 1919ல் உள்ள பாகப்பிரிவினை பத்திரத்தை வாங்கி படித்து பார்த்தேன். அந்த மூல பத்திரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து இடத்தில் 8 சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அதில் என்னுடைய சொத்து எது என்றாலும் அதன் விஸ்தீரனம் என்ன என்றாலும் தெரியாது. எனக்கு விற்றவர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் அருளோ அல்லது வேறு யாராவதோ சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் இல்லை.

4. அசல் வழக்கு எண்கள் 416/2009, 418/2009 ஆகிய வழக்குகளை இவ்வழக்கின் வாதி அருளோ அவருக்கு விற்றவர்களோ தரப்பினர் கிடையாது என்று சொன்னால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கூட்டு சமுதாய பய்னபாட்டிற்காக என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அதனை தனிப்பட்ட நபர்

வாங்க முடியுமா என்ற விவரத்தை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அவ்வாறு தெரிந்து கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5. நான் உரிமை கோரும் சொத்து உட்பட அனைத்து தாவா சொத்துக்களுக்கும் பட்டா சிவகொழுந்து செட்டியார் பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ–1, பி.வா.சா.ஆ–2 ஆவணங்களில் 1919ல் இருந்து சொத்து அனுபவித்தில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அது பற்றிய எந்த கட்சியும் எதிருரையில் எழுப்பியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விற்றவர்களின் பெயரில் இருந்த பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

6. தாவாவில் காட்டப்பட்டுள்ள 8 சர்வே எண்களும் அனைத்தும் எனக்கு சொந்தம் கிடையாது என்றால் சரிதான். சொத்திற்கு எனக்கு விற்றவர்களுக்கு உரிமை கிடையாது என தெரிந்திருந்தும் உரிமை மூலம் இல்லாதவர்களிடம் இருந்து சொத்தை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியும் வாதிக்கு விற்றவர்களும் தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவாவில் எனக்கு அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பில் இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.